

முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (14.8.2025), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் என். திருக்குமரன், இணை செயலாளர் குமார் துரைசாமி தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் தலைவர் கே.எஸ். சுந்தரராமன், பொதுச் செயலாளர் கே. செல்வராஜு கரூர் ஜவுளி உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் பி. கோபாலகிருஷ்ணன், இணை செயலாளர் சேதுபதி, ஆடை மற்றும் கைத்தறி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜய் அகர்வால், துணைத் தலைவர் ஷான் ரெட்டி, இந்திய கிரானைட் மற்றும் கல் தொழில் கூட்டமைப்பு துணைத் தலைவர் என். அசோகன், வேதியியல் தொழில் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ். இளநாகை, இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் கூட்டமைப்பு மண்டல தலைவர் பி. கோபாலகிருஷ்ணன், தோல் ஏற்றுமதி கவுன்சில் தெற்கு மண்டல் தலைவர் அப்துல் வகாப் இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் மண்டல இயக்குநர் ராஜகோபால் ரால், இந்திய ஈடல் உணவு ஏற்றுமதி சங்கத்தின் செயலாளர் தமிழ்நாடு பகுதி) முகமது ஆத்திஃப் இந்திய வாகன உதிரியாக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஸ்ரீராம் விஜி, ரத்தினக் கற்கள் மற்றும் நகை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் கே.சீனிவாசன் ஆகியோர் சந்தித்து, கைத்தறி உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் ஏற்றுமதிக்கு அமெரிக்க அரசு அதிக வரி விதித்துள்ளதால் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்து. தேவையாள உதவிகளை வழங்கிடுமாறு கோரிக்கை மறு அளித்தனர். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ரஸ்யாள், தலைமர் செய்யாளர் நா. முருகானந்தம், நிதித்துரை முதன்னபச் செயலாளர் த.உதயச்சந்திரன், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேற்று முன்தினம் (14.08.2025) சென்னை, சேப்பாக்கம் லாக் நகரில் 31.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய பக்கிங்ஹாம் கால்வாயில் 7.315 கி.மீட்டர் நீளத்திற்கு புனரமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றாக, நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சு.கோபால கிருஷ்ணண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், நீர்வளத்துறை பொறியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தனித் துறை கண்டவர் கலைஞர்:

# மாற்றுத்திறனாளிகளின் குரலை உள்ளாட்சி அமைப்புகளிலும் எதிரொலிக்கச் செய்தவர் நம் முதலமைச்சர்!

### சென்னை சிறுமலர் சிறப்புப் பள்ளி நூற்றாண்டு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,ஆக.16-

**சென்னையில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சிறுமலர் சிறப்புப் பள்ளி நூற்றாண்டு விழா மற்றும் பள்ளியின் விளையாட்டு விழா நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார். அந்த நிகழ்வில், அப்பள்ளியின் வளர்ச்சிக்கு நிதி பங்களிப்பு செய்ததுடன், `கல்வி எனும் பேரொளியை இன்னும் பல நூறாண்டுகள் கொண்டு சேர்த்திட வேண்டுமென வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர் ``மாற்றுத்திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளிலும் எதிரொலிக்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள், நியமன முறையில் மாற்றுதிறானாளிகளை உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கின்ற நிலைமையை, இன்று உருவாக்கி இருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

சிறுமலர் சிறப்புப் பள்ளியின் நூற்றாண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்கு, `ஓரணியில், ஒரே கனவில்’ என்ற சிறப்பான தலைப்பை, நீங்கள் தேர்வு செய்துள்ளீர்கள். ஓரணியில் நின்று நீங்கள் காண்கின்ற கனவு, நிச்சயம் ஒரு நாள் நினைவாகும். அதற்கு நாங்களும், நம் முதலமைச்சர் அவர்களும் உங்களுக்குத் துணை நிற்போம் என்கிற உறுதிமொழியை இன்று உங்களுக்கு தருகிறேன்.

#### மிகப்பெரிய சாதனை

ஓர் நிறுவனத்தை வெற்றிகரமாக 10, 20 வருடங்கள் நடத்துவதே ஒரு சவால். ஆனால், இந்த சிறப்புப் பள்ளியை 100 வருடம் நடத்துவது மிகப்பெரிய சாதனை. அதற்கு எங்கள் பாராட்டுகள், வாழ்த்துகள். அதுவும், பார்வை மாற்றுத்திறனாளி பிள்ளைகளுக்கு 100 வருடங்களுக்கு மேல் கல்வியை கொண்டுபோய் சேர்க்கின்ற இந்தப் பள்ளியை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. அதுமட்டுமல்ல, கல்வி என்பது யாராலும் அழிக்க முடியாத சொத்து என்று நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார். அதை மெய்ப்பிக்கின்ற வகையில் வாழ்க்கையில் எவ்வளவு தடங்கல்கள் வந்தாலும், எப்படியாவது படிக்க வேண்டும் என்று இங்கு வந்து இருக்கின்ற அத்தனை மாணவிகளுக்கும் எனது சிறப்பான பாராட்டுகள். உங்களின் விடா முயற்சிக்கும், தன்னம்பிக்கைக்கும் நாங்கள் அத்தனைபேரும் தலை வணங்குகிறோம்.



இந்தப் பள்ளிக்கும், எனக்கும் நீண்ட நெடிய ஒரு தொடர்பு உண்டு. என் தந்தை, நம் முதலமைச்சர் அவர்கள் அவரின் ஒவ்வொரு பிறந்த நாளிலும், யாரை சந்திக்கிறாரோ இல்லையோ, இங்கே வந்து உங்களை எல்லாம் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பவர். அவரின் பிறந்தநாளில் உங்களின் முதல் வாழ்த்துக்காகத்தான் காத்திருப்பார். நானும் எனது பல பிறந்தநாள்களுக்கு இங்கு வந்திருக்கிறேன். முதலமைச்சரின் பிறந்தநாளுக்கும், அவருடனும் நான் வந்திருக்கிறேன்.

#### 100 சதவிகித தேர்ச்சி

அப்படிப்பட்ட பெருமையான பள்ளிக்கு வந்து உங்களையெல்லாம் சந்திப்பதை மிகப் பெருமையாக நினைக்கிறேன். இந்தப் பள்ளி ஒவ்வொரு வருடமும், அரசு பொதுத் தேர்வில் 100 சதவிகித தேர்ச்சியைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. இதைக் கேட்கும்போதே மிகப் பெருமையாக இருந்தது. உங்களின் இந்த சாதனை தொடர வேண்டும். படிப்பில் மட்டுமில்லாமல், விளையாட்டிலும் சிறுமலர் பள்ளி மாணவர்கள் நீங்கள் சிறப்பாகச் செயல்படுகிறீர்கள்.

இந்தப் பள்ளியில் படித்த பல மாணவர்கள் இன்றைக்கு ஆசிரியர்களாக, வழக்கறிஞர்களாக, அரசு அதிகாரிகளாக, விளையாட்டு வீரர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் போல் நாளை நீங்களும் நிச்சயம் ஒரு மிகப் பெரிய ஆளாக உருவாகி வருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் மட்டுமல்ல, உங்களைப் பார்த்து இன்னும் பல நூறு பேர் வெற்றி பெற்ற மனிதர்களாக வருவார்கள்.

பார்த்துப்பார்த்து செய்தவர்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞராக இருக்கட்டும், நம் முதலமைச்சராக இருக்கட்டும் என்றைக்குமே மாற்றுத் திறனாளிகளுக்கு உறுதுணையாகத்தான் இருந்து வருகிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலில் மாற்றுத்திறனாளிகள் என்று பெயரால் அழைக்க வைத்தார்கள். மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தனி துறையை ஆரம்பித்தவர் கலைஞர் அவர்கள். அது மட்டுமல்ல அந்தத்துறையை தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்து, மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான ஒவ்வொன்றையும் பார்த்துப்பார்த்து செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞர் வழியில் இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்களும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். உங்களின் நலனுக்கு தொடர்ந்து பல திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். மிக முக்கியமாக மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகையை இருமடங்காக நம் முதலமைச்சர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளிலும் எதிரொலிக்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள், நியமன முறையில் மாற்றுதிறானாளிகளை உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கின்ற நிலைமையை இன்று உருவாக்கி இருக்கிறார்கள்.

#### எதிர்காலமும் சிறக்கட்டும்

மாற்றுத்திறனாளி மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் நம் இயக்கமும், நம் கழக அரசும் என்றைக்கும் துணை நிற்கும். உங்கள் அனைவரின் எதிர்காலமும் சிறக்கட்டும். சிறுமலர் பார்வை மாற்றுத்திறனாளிகள் பள்ளி இன்னும் பல நூற்றாண்டுகள் சேவையைத் தொடர என் வாழ்த்துகளை தெரிவித்து, இந்த வாய்ப்பிற்கு நன்றிகூறி விடைபெறு கிறேன். வெற்றி பெற்ற உங்கள் அத்தனைப்பேருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, மகளிர் ஆணையத் தலைவர் குமாரி விஜயகுமார், வி.எஸ்.கலை, நுங்கை வி.எஸ். ராஜ், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் பிரகாஷ், துபாய் விஜய், வட்டச் செயலாளர் மகேஷ், ஜம்புலிங்கம், தலைமை அருட்சகோதரி ரோசி, சிறுமலர் சிறப்புப்பள்ளி வளாகத்தின் இயக்குநர் அருட்சகோதரி சவேரியா, பள்ளியின் தாளாளர் அருட்சகோதரி கெம், பள்ளி முதல்வர் அருட்சகோதரி பா்ஃபீன் நெவீஸ், தலைமை ஆசிரியை நிர்மலா ராணி உள்பட மாணவ மாணவிகள் பலரும் கலந்துகொண்டனர்



கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில், நேற்று முன்தினம் சென்னை – அண்ணா அறிவாலயத்தில் கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இலக்கிய அணித் தலைவர் அன்வர் ராஜா, இலக்கிய அணிச் செயலாளர் வி.பி. கலைராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (14.08.2025) ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வளர்ச்சித் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பா.பொன்னையா, கூடுதல் இயக்குநர் (பொது) லலித் ஆதித்ய நீலம், இயக்ககத்தின் அனைத்து கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.